# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்! ஆங்கில நாளேடுகள் படப்பிடிப்பு!






விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க வெற்றி பெற்றதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப் பட்டதையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் அன்னியூர்சிவா எம்.எல்.ஏ. மாமல்லபுரத்தில் நடைபெற்ற என் வாக்குச்சாவடி! வெற்றிவாக்குச்சாவடி நிகழ்ச்சியில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### விருதுநகர் மாவட்டக் கழகம் சார்பில்

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

### மாவட்டச் செயலாளர்கள் – அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் – தங்கம் தென்னரசு அறிக்கை!

விருதுநகர்,அக்.29-

விருதுநகர் மாவட்ட கழகச் செயலாளர்கள் - அமைச்சர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர். இராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் கிராமத்தில் தேவர் ஜெயந்தி விழாவில் பங்கேற்க வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு விருதுநகர் திருச்சுழி அருகில் உள்ள கானா விளக்கில் நாளை (30.10.2025-வியாழக்கிழமை), காலை பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் குருபூஜை விழாவிற்கு வருகை தரும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு திமுக சார்பில் எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட உள்ளது.





இந்நிகழ்ச்சியில் விருதுநகர் தெற்கு, வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய நகர பகுதி மற்றும் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கிளைச் செயலாளர் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள், கழக தொண்டர்கள் என அனைவரும் பங்கேற்ற வகையில் இரு வண்ணக் கொடி ஏந்தி விண்ணை முட்டும் அளவிற்கு முதல்வரை வரவேற்று ஓசைகள் எழுப்பி சிறப்பான வரவேற்பு அளித்திட வேண்டும். இவ்வாறு தெற்கு, வடக்கு மாவட்ட திமுக செயலாளர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



திருப்பத்தூரில் நடைபெற்ற சிவகங்கை மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் சீமான் சன்.சுப்பையா சகோதரர் ச.மணிமுரசு என்ற சீமான் முரசு இ.திவ்யா ஆகியோரது திருமணத்தில் மணமக்களை அமைச்சர்கள் கே ஆர்.பெரியகருப்பன், சிவ.வீ.மெய்யநாதன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன்,திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மருதுஅழகுராஜ், முன்னாள் எம்.எல்.ஏ., எஸ்.மாரியப்பன் கென்னடி மற்றும் கழக நிர்வாகிகள் வாழ்த்தினார்கள்.



வேலூர் மாநகராட்சி கன்சால்பேட்டையில் தொடர் மழையால் தேங்கியுள்ள மழை நீரை மின்மோட்டார் மூலம் வெளியேற்றப் படுவதை மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஆட்சியர் வே.இரா. சுப்புலட்சுமி ஆகியோர், பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். உடன் மாநகராட்சி ஆணையாளர் லட்சுமணன் வட்டாட்சியர் வடிவேல் மற்றும் துணை சார்ந்த அலுவலர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.